இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
செவ்வாய்க்கிழமை 16.12.2025

# வெல்லும் தமிழ்ப் பெண்கள்!

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை விரிவாக்கி உள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுவரை ஒரு கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பேர் உரிமைத் தொகை பெற்று வந்தார்கள். 16 லட்சத்து 94 ஆயிரத்து 339 பேருக்கு விரிவாக்கம் செய்துள்ளார் முதலமைச்சர். இனி மொத்தம் ஒரு கோடியே 30 லட்சத்து 69 ஆயிரத்து 831 பேர் பெறப் போகிறார்கள்.**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விதையாய் மாறி, 10 மாநிலங்களில் விருட்சமாக எழுந்து நிற்கிறது.

கர்நாடகாவில் கிரகலட்சுமி என்ற பெயரிலும், மத்தியப் பிரதேசத்தில் முதல்வர் லட்லி பெஹ்னா யோஜனா என்ற பெயரிலும், மகாராஷ்டிராவில் முதல்வர் லாட்கி பாஹின் யோஜனா எனவும், ஒடிசாவில் சுபத்ரா யோஜனா என்ற பெயரிலும், ஜார்க்கண்டில் மைய சம்மன் யோஜனா என்ற பெயரிலும், இமாசலப் பிரதேசத்தில் இந்திரா காந்தி பியாரி பெஹ்னா சுக் சம்மன் நிதி யோஜனா என்ற பெயரிலும், சத்தீஷ்கரில் மஹ்தாரி வந்தன் யோஜனா என்ற பெயரிலும், மேற்கு வங்காளத்தில் லட்சுமி பந்தர் என்ற பெயரிலும், சிக்கிமில் சிக்கிம் ஆமா யோஜனா என்ற பெயரிலும், புதுச்சேரியில் மகளிர் உதவித் தொகை என்ற பெயரிலும், மகளிர் உரிமைத் தொகை திட்டம் 10 மாநிலங்களில் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் 15 லட்சம் பேரை இத்திட்டத்தில் இருந்து நீக்கினார்கள். அதுபோலத் தமிழ்நாடு யாரையும் நீக்காமல், விடுபட்டவர்களையும் சேர்த்தது. இதுதான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பு ஆகும்.

தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம், ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களை நடத்தி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு விண்ணப்பங்களை கேட்டுப் பெற்றது திராவிட மாடல் அரசு. அதில் இருந்து மகளிர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

இது அந்தப் பெண்களின் வாழ்வாதாரத்திற்கும் மட்டுமல்ல, அவர்களைச் சுற்றியிருக்கும் பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவுகிறது. குறிப்பாகக் கிராம பொருளாதாரம் இதன் மூலம் தன்னிறைவு பெறுகிறது. உதவித் தொகை பெறும் பெண்கள் அதனைத் தங்கள் தேவைகளுக்குச் செலவிடும் போது அந்தப் பணம் கடைகள் வழியாகச் சென்றடைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பலன் அளிக்கிறது.

சொந்தக் காலில் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள, மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், சுய உதவிக்குழு, புதுமைப்பெண் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தி வருகிறது.

அரசின் இலவசத் திட்டங்களோடு பெண்களையும் ஒப்பிட்டு, அருவருக்கத் தக்கக் கருத்தை வெளியிட்டார் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம். தமிழ்நாடு அரசு பெண்களுக்கு வழங்கும் தொகையைப் பிச்சை போடுவதாகச் சொல்லி கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களை பா.ஜ.க. நடிகை குஷ்பு இழிவுபடுத்தினார். பா.ம.க.வின் சவுமியா அன்புமணி, ‘உங்க 1000 ரூபாய் யாருக்கு வேணும்?’ எனக் கேவலமாகப் பேசினார்.

புதிதாகக் கட்சி ஆரம்பித்திருப்பவர்களும் (த.வெ.க.) மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த வேண்டும் எனப் பேசுகிறார்கள். ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனோ அரசு வழங்கும் நிவாரணத் தொகையைக் கேலி செய்தார். “வெள்ளம் வந்தால், வீடு இடிந்து விழுந்தால் 500, 1000 எனத் தருகிறார்கள். இத்தகைய நடவடிக்கையால் நாடு முன்னேறாது. எப்போது பார்த்தாலும் இன்னொருவர் போடும் பிச்சையில் நாம் வாழத் தேவையில்லை” என்றார்.

மகளிர் உரிமைத் தொகை தங்கள் மாநிலங்களில் அமல்படுத்தும் பா.ஜ.க.வினர் கூட தமிழ்நாட்டில் அந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். இவர்களின் குணமும் நிறமும் ஒன்றுதான். இவர்கள் ஒன்றாகக் கூட்டணி சேர்ந்து, தி.மு.க.வை எதிர்க்கவில்லை. ஒட்டுமொத்தப் பெண்களின் நலனையே அழிக்கக் கைகோர்த்திருக்கிறார்கள்.

**மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண் போன்ற பொருளாதாரத் தன்னிறைவு திட்டங்களால் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். அதைத்தான் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ நிகழ்ச்சி மூலமாக தமிழ்நாடு அறிந்தது.**

**“கூலி வேலைக்குச் சென்று எனது குடும்பத்தை கவனித்து வந்தாலும் அந்தப் பணம் போதுமானதாக இல்லை. மாதம் எனக்கு ஆயிரம் ரூபாய் கிடைப்பது, பத்தாயிரத்தைப் போல இருக்கிறது. எனது எல்லாக் கஷ்டத்தையும் போக்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி”** என்று கண்கலங்கச் சொன்னார் மாதவி என்ற பெண்.

ஈழத்தில் இருந்து வந்த சாரா என்ற பெண், இலங்கை மக்களுக்காக அரசு சார்பில் கட்டிக் கொடுத்த வீடுகளைப் பற்றி பெருமையாகச் சொன்னார். முதலமைச்சரை ‘அப்பா’ என்று விளித்தார். அதை ஒரு கைக்குட்டையில் எம்பிராய்டு செய்து எடுத்து வந்து கொடுத்த காட்சி, மாண்புமிகு முதலமைச்சருக்கு கிடைத்த நற்சாட்சி ஆகும்.

**‘நீங்கள் தைரியமாக முன்னேறுங்கள். உங்களை அழைத்துச் செல்ல இந்த அரசு இருக்கிறது’** என்றார் நடிகை ரோகினி. **‘நீதிக்கட்சி ஆட்சி முதல் பெண்கள் முன்னேற்றத்துக்கு திராவிட இயக்கம் பாடுபட்டு வருகிறது’** என்பதை நடிகர் சத்யராஜ், இயக்குநர் ஞானவேல் ஆகியோர் பட்டியலிட்டார்கள். **‘பெண்கள் மேடையேறிப் பேசியதுதான் திராவிட இயக்கத்தின் சாதனை’** என்றார் பட்டிமன்றப் பேச்சாளர் கவிதா ஜவஹர். **‘தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், புரட்சியாளர் காரல் மார்க்ஸ் ஆகியோரின் குரலாக இருக்கிறார் நமது தோழர் மு.க.ஸ்டாலின்’** என்றார் இயக்குநர் ராஜு முருகன்.

மகளிர் சுய உதவிக்குழு மூலமாக தனது வெற்றி நிச்சயமாகி வருவதாக மாலா என்ற பெண் பட்டியலிட்டுச் சொன்னார்.

**‘வீட்டை விட்டு வெளியே வராத நான், இன்று என் வாழ்க்கையில் முதல் தனிப் பயணத்தை சென்னையில் இருந்து தொடங்கி இருக்கிறேன். யாரின் துணையும் இல்லாமல் தனியாக வர முடிந்ததே முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களால்தான். இந்த விழாவில் என்னை பேச அழைத்த போது திருப்பரங்குன்றம் மலைமேல் ஏறி நின்று ‘நா ஜெயிச்சுட்டேன் முருகா’ என்று கத்திவிட்டு வந்தேன். எனக்கு தைரியம் தந்த முதலமைச்சருக்கு நன்றி”** என்று பேசினார் சரண்யா.

**தமிழ்ப் பெண்களை, வெல்லும் பெண்களாக மாற்றிய முதலமைச்சர்தான் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2025) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூரில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழக கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தயாநிதிமாறன், சி.என்.அண்ணாதுரை, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட கழக நிருவாகிகள் கு.கருணாநிதி, கோ.கண்ணன், டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா ப.விஜயரங்கன், திருமதி விஜயலட்சுமி ரமேஷ், ஒன்றியச் செயலாளர்கள் ஏ.எஸ்.ஆறுமுகம், வி.பி.அண்ணாமலை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2025) தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் – திருமதி ரோஜா தம்பதியரின் மகன் எழில்மறவன் மற்றும் வெ.சரவணன் திருமதி சாந்தி தம்பதியரின் மகள் கிருத்திகா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், இரா.இராஜேந்திரன், அர.சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் தொல்.திருமாவளவன், இரா.முத்தரசன், ஈ.ஆர்.ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மற்றும் பொன் குமார், தனியரசு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பிறகு, நேற்று முன்தினம் (14.12.2025) திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள செல்லும் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### திருநங்கைகள் – பாலின சிறுபான்மையினர்களுக்கான சுகாதார விழிப்புணர்வு :

# தமிழ்நாட்டிடமிருந்து ஒன்றிய அரசு பாடம் கற்றுக் கொண்டதா?

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, டிச. 16 -**

**திருநங்கைகள், பாலின சிறுபான்மையினருக்கான சுகாதார விழிப்புணர்வு குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுத்துப்பூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.**



“தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் அண்மையில், “மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவர்கள், மருத்துவ கல்வியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கு திருநங்கைகள் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கட்டாய பயிற்சி அளிக்க வேண்டும்” என வழிகாட்டியுள்ளது. இது குறித்து ஒன்றிய அரசு அறிந்துள்ளதா?

ஒன்றிய அரசின் நிர்வாகத்தில் உள்ள மத்திய மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் இதுபோல திருநங்கைகள் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி அமர்வுகளை கட்டாயமாக்கி உள்ளதா?

அப்படியானால் அத்தகைய அமர்வுகள் நடத்தப்பட்டதன் விவரங்கள் மாநிலம், யூனியன் பிரதேசங்கள் வாரியாக என்ன?

பாலின சிறுபான்மையினருக்கான மருத்துவ மற்றும் சுகாதாரம் தொடர்புடைய விரிவான பயிற்சி அமர்வுகளைத் தொடங்க அரசாங்கத்தால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா அல்லது எடுக்க முன்மொழியப்பட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?” என்று கனிமொழி கருணாநிதி கேள்விகளை எழுப்பி இருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் அனுப்ரியா பட்டேல் பதிலளிக்கையில்,

“நாட்டில் மருத்துவக் கல்வியை ஒழுங்குபடுத்தவும் மேற்பார்வையிடவும் நாடாளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு உச்ச சட்டப்பூர்வ அமைப்பாக தேசிய மருத்துவ ஆணையம் (NMC) செயல்படுகிறது.

இளநிலை மருத்துவ மாணவர்களுக்காக 2024 ஆம் ஆண்டில் தேசிய மருத்துவ ஆணையம் திறன் அடிப்படையிலான மருத்துவக் கல்வி (CBME) வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி அடிப்படை நெறிமுறை மதிப்பீடுகள், நோயாளியை மையமாகக் கொண்ட பொறுப்புணர்வு, பயனுள்ள தகவல் தொடர்பு திறன் மற்றும் பாலின உணர்திறன் ஆகியவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திறன்களை வளர்ப்பதற்காக, AETCOM என்ற தலைப்பில் ஒரு பிரத்யேக பாடத்திட்டம் இடம் பெற்றுள்ளது.

இது நோயாளிகளை அணுகும் முறை, நெறிமுறைகள் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

மேலும், LGBTQA+ சமூகத்தைக் கையாள்வதில் மருத்துவசட்ட, சமூக, நெறிமுறை மற்றும் மனிதாபிமானம் பற்றிய புரிதலை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில், மனநல மருத்துவப் பாடத்தின் கீழ் ஒரு தொகுப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

அடல் பிஹாரி வாஜ்பாய் மருத்துவ அறிவியல் நிறுவனம் மற்றும் டாக்டர் ராம் மனோகர் லோஹியா மருத்துவமனை தெரிவித்தபடி, அம் மருத்துவமனையில், 17.11.2023 முதல் திருநங்கைகளுக்கான புறநோயாளிகள் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் செயல்பட்டு வருகிறது” என்று பதில் தெரிவித்துள்ளார்.

### கேலோ இந்தியா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, நிதி உதவிகள் யாவை?

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி !

புதுடெல்லி, டிச.16 –

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்துதேர்வானவர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு வழங்கபப்டும் பயிற்சிகள் மற்றும் நிதி உதவிகள் என்ன?கிராமப்புறங்களில் விளையாட்டை மேம் படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என். வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக்மாண்டவியா அளித்த பதில் வருமாறு: –

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்து 2023–24ம் ஆண்டில் 173 தடகளவீரர்களும், 2024–25–ல் 194 பேரும், 2025–26ல் 186 பேரும் தேர்வு செய்யப்பட்டார்கள். சென்னை, திருவள்ளூர், கோவை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் தேர்வாகியிருக்கிறார்கள்.



திறமையான விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டுகேலோ இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படும்ஏதேனும் ஒரு கேலோ இந்தியா மையம் மற்றும் விளையாட்டு அகாடமியில் அவர்கள் சேர்ந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். அப்படிச் சேரும் வீரர்களுக்கு பயிற்சி செலவு போட்டிகளுக்குத் தயாராவது கல்வி அவர் சார்ந்த விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு என ஆண்டுக்கு 6.28 லட்சம் ரூபாய் நிதி உதவியும் அறிவியல் பூர்வமான விளையாட்டு திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கேலோ இந்தியா திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அத்தனை விளை யாட்டுகளோடு தொடர்புடைய வீரர்களுக்கும் இந்த நிதி உதவி அளிக்கப்படுகிறது.

நாடு முழுக்க உள்ள இளைஞர்களிடையே விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்திவிளையாட்டு உணர்வுகளை மேம்படுத்தி அவர்களை சாதனைக்குரியநபர்களாகமாற்றுவதும்கேலோ இந்தியா திட்டத்தின் ஓர் அம்சமாகும். இதுவரை பள்ளிகளுக்கானகேலோ இந்தியா விளையாட்டு ஒரு முறையும் இளைஞர்களுக்கானகேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் ஆறு முறையும் நடந்துள்ளன. இந்தப்போட்டிகள் அனைத்தும் சர்வதேசத்தரத்தில் நடத்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப்போட்டிகளில் நாடு முழுக்க இருந்து 34500 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களில் தகுதியான 2897 பேர் கேலோ இந்தியா தடகள வீரர்களாக தேர்வு செய்யப்பட்டனர். இப்படி தேர்வாகும்வீரர்களுக்குசர்வதேசத் தரத்தில் பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில்அதற்கென கூடுதல் அங்கீகாரம் பெற்ற கேலோ இந்தியா மையங்களில் இவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இங்கே பயிற்சி பெறும் வீரர்கள் தேசிய சர்வதேச அளவில் விளையாடும் பிறவீரர்களோடு விளையாட வைக்கப்படுகிறார்கள். இதன் மூலம் இந்த வீரர்கள் தங்கள் திறமையை நம்பிக்கையைஉயர்த்திக்கொள்ள முடிகிறது. இது எதிர்காலத்தில் நமது நாட்டுக்காக விளையாடும்போது கூடுதல் பலத்தை உற்சாகத்தை அளிக்கும்.

இதுதவிர ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகம்தொலைதூர மற்றும் கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

விளையாட்டு மேம்பாட்டுக்கான தேசிய அளவிலான திட்டம்விளையாட்டு சம்மேளனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்சர்வதேச அளவில் பதக்கம் பெறும் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு பணப்பரிசு வழங்குதல்தேசிய அளவில் விளையாட்டு விருதுகள் அளித்தல் மெச்சத்தகுந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்விளையாட்டு வீரர்களுக்கான நல்வாழ்வளிக்கும் பண்டிட் தீனதயாள் உபாத்யாய் திட்டம் தேசிய விளையாட்டு மேம்பாட்டுநிதியம் அமைத்தல் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையங்கள் மூலமாக விளையாட்டுப் பயிற்சி மையங்களை நடத்துவது போன்ற திட்டங்கள் அவற்றில் முக்கியமானவை ஆகும்.

மேற்கண்ட ஒவ்வொரு திட்டத்தின் முழு விபரம் யாரெல்லாம் அவற்றைப் பெறத்தகுதியானவர்கள் அவற்றை எப்படிப் பெறுவது போன்ற விபரங்கள் எல்லாம் ஒன்றியவிளையாட்டுத்துறைஅமைச்சகத்தின்அதிகாரப்பூர்வஇணையதளப் பக்கத்தில் விபரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மன்சுக்மாண்டவியா பதிலளித்தார்.